# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

***********************

### இந்திய இலங்கை ஆயுதப் படைகளின் தேசிய பாதுகாப்பு கல்லூரிகள் இடையிலான 50 வருடகால பிணைப்பின் நினைவு விழா

இந்திய இலங்கை ஆயுதப் படைகளின் தேசிய பாதுகாப்பு கல்லூரிகள் இடையிலான தொடர்புகளின் 50 வருட நிறைவுக் கொண்டாட்டங்கள் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் 2023 ஆகஸ்ட் 28 ஆம் திகதி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. இரு நாடுகளினதும் இராணுவத்தினர் இடையில் காணப்படும் ஒத்துழைப்பு, தோழமை மற்றும் நட்புறவு ஆகியவற்றின் நித்திய பிணைப்பினை கொண்டாடும் வகையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. இந்நிகழ்வில் பாதுகாப்பு செயலர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்தார். அத்துடன் பாதுகாப்பு படைகளின் பிரதானி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா, இலங்கை இராணுவ, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் தளபதிகள், இந்திய தேசிய பாதுகாப்பு கல்லூரி அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பிரமுகர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

2. இந்த விசேட நிகழ்வில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டிருந்த அட்மிரல் டி பி குணேசேகர (ஓய்வு) அவர்கள் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே ஆகியோரால் கௌரவிக்கப்பட்டார். அட்மிரல் குணேசேகர அவர்கள் இந்திய தேசிய பாதுகாப்பு கல்லூரியில் பயின்ற முதல் இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு இச்சிறப்பு கௌரவத்தினைப் பெற்றுக்கொண்ட அவர், கிட்டத்தட்ட 50 வருடங்களுக்கு முன்னர், 1972 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள தேசிய பாதுகாப்பு கல்லூரியில் பயின்ற காலப்பகுதி தொடர்பான தனது அனுபவங்களை பகிர்ந்துகொண்டார்.

3. இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கையின் அடிப்படையில் இலங்கையின் திறன் விருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இந்தியா அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாக உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே அவர்கள் இங்கு சுட்டிக்காட்டியிருந்தார். ஆயுதப் படைகளுக்கிடையேயான பயிற்சி ஈடுபாடுகள் மூலமாக இருதரப்பினர் இடையிலான சகோதரத்துவம் மற்றும் இயங்குதிறன் ஆகியவற்றின் உள்ளுணர்வு தூண்டப்படுவதுடன் வலுவான பிணைப்புகளுக்கு அடித்தளமாக அமைகின்றன என்றும் அவர் வலியுறுத்தினார்.

4. இதேவேளை இங்கு தனது கருத்துகளைப் பகிர்ந்துகொண்டிருந்த பாதுகாப்புச் செயலாளர் அவர்கள், பல்வேறு பரிமாணங்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான பிணைப்பினை வலுவாக்குவதில் உயர் ஸ்தானிகர் மேற்கொண்டுள்ள முயற்சிகளை பாராட்டியிருந்தார். அத்துடன் இலங்கை ஆயுதப் படையினருக்கு பயிற்சிகளை வழங்குவதில் மிகவும் முக்கியமான பங்கினைக் கொண்டிருக்கும் இந்தியா, மிகவும் நெருக்கமான அயல் நாடாகவும் நட்பு நாடாகவும் வலுவான கலாசார ஜனநாயக மற்றும் செயல் ரீதியான ஒற்றுமைகளை பகிர்ந்துகொள்வதாகவும் குறிப்பிட்டிருந்தார். மேலும், இலங்கை ஆயுதப் படைகளுக்காக முழு அளவிலான நிதி அனுசரணையுடன் வழங்கப்படும் பரந்தளவான பயிற்சி வாய்ப்புகளுக்காக அவர் தனது நன்றியினைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

5. இந்த நிகழ்வில் இந்திய தேசிய பாதுகாப்பு கல்லூரியில் பயிற்சிகளைப் பெற்ற 50 இலங்கையர்கள் கலந்துகொண்டிருந்தனர். மேலும், வெளிநாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்காக ஒதுக்கப்படும் மொத்த திறன் விருத்தி செயற்பாட்டு ஆசனங்களில் 10 வீதமானவை இலங்கை ஆயுதப் படையினருக்காக ஒதுக்கப்படுவதுடன் இதுவே பாரியளவிலான ஒதுக்கீடாகவும் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

*********************

கொழும்பு
29 ஆகஸ்ட் 2023